மேலும், இப்பகுதியிலுள்ள அரசுப் பள்ளியில் படித்த மாணவி மருத்துவப் படிப்பிற்குத் தேர்வாகியுள்ளார் என்பதை இந்த அவையில் பெருமையோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணீதரன், கேள்வியை சுருக்கமாகக் கேளுங்கள்.*

திரு. எஸ்.எஸ். ரமணீதரன்: *இந்தப் பகுதியில் எந்தவொரு மேல்நிலைப் பள்ளியும் இல்லை. இங்கு பயிலும் மாணவ, மாணவியர் மேல்நிலைக் கல்வி கற்க வேண்டுமானால், 40 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள அந்தியூருக்குத்தான் செல்ல வேண்டும். இங்கு தொடர் பேருந்து வசதி கிடையாது. அடர்ந்த காட்டுப் பாதை வழியாகத்தான் செல்ல வேண்டும். இவர்களுடைய பெற்றோர்கள், பாதுகாப்பு கருதி, உயர்நிலைப் பள்ளிப் படிப்புடன் நிறுத்தி, இளம் வயதிலேயே திருமணம் செய்து வைக்கின்ற சூழ்நிலையுள்ளது. எனவே, இப்பகுதியிலுள்ள ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினத்தைச் சேர்ந்த மாணவ, மாணவியரின் நீண்ட நாள் கோரிக்கையான, பர்கூர் உண்டி உறைவிட உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். மேலும், தரம் உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் நன்றி கூறி அமைகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 222, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே. போஸ், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

222—

கிராம நிருவாக அலுவலகக் கட்டடம்

***51374—திரு. ஏ.கே. போஸ்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை வடக்கு தொகுதி, வார்டு எண்கள் 27, 45, 43

2015 செப்டம்பர் 3]

ஆகிய பகுதிகளுக்கான கிராம நிருவாக அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) மதுரை வடக்கு தொகுதி, வார்டு எண்கள் 27, 45 மற்றும் 43 ஆகியவை தல்லாகுளம் மற்றும் சாத்தமங்கலம் கிராம நிருவாக அலுவலர்களின் நிருவாக எல்லைக்குள் உள்ளன. அவற்றில், தல்லாகுளம் கிராம நிருவாக அலுவலகம் ஏற்கெனவே கட்டப்பட்டு, கடந்த 2-6-2015 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கரங்களால் திறக்கப்பட்டு, தற்போது புதிய கட்டடத்திலே அலுவலகம் செயல்பட்டு வருகிறது. மேலும், சாத்தமங்கலம் கிராம நிருவாக அலுவலகம் கட்ட ஏற்கெனவே வார்டு எண் 19, பிளாக் எண் 11, டவுன் சர்வே எண் 27-ல் 2 சென்ட் இடம் தேர்வு செய்யப்பட்டு, கட்டடம் கட்டும் பொருட்டு பொதுப் பணித் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட இடம், நகர அளவைப் பதிவேட்டில் மதுரை மாநகராட்சி குடிசைவாழ் நல மையம் எனத் தாக்கலாகியுள்ளது. எனவே, மதுரை மாநகராட்சியின் ஒப்புதல் பெற்று, விரைவில் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே. போஸ் அவர்கள்.*

திரு. ஏ.கே. போஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 7 கோடி தமிழ் மக்களையும் காத்திட அவதரித்த தமிழ்த் தாயே! (மேசையைத் தட்டும் ஒலி) நாள்தோறும் நல்ல பல திட்டங்களைத் தந்து தமிழகத்தை வளப்படுத்திய தமிழக மக்களின் விடிவெள்ளியே! கணினி முதல் காலணி வரை அள்ளித் தந்த கல்வித் தாயே! மக்கள் சக்தி படைத்த மகா சக்தியே! °ாா!21 ஆம் நூற்றாண்டின் ஈடு இணையற்ற இந்தியப் பெருந்தலைவியே! கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.*

கேட்டவுடனே, கும்பிட்ட கைகள் விலகும்முன்னரே வரம் கொடுத்த தாய்க்கும், அதைத் தந்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக நன்றி கூறி விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 223, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் த. ஹரிதாஸ், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

223—

பெண்கள் உயர்நிலைப் பள்ளி

***20593 டாக்டர் த. ஹரிதாஸ்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டிவனம் தொகுதி, ஒலக்கூர் கிராமத்திலுள்ள இருபாலர் மேல்நிலைப் பள்ளியை இரண்டாகப் பிரித்து பெண்களுக்குத் தனியாக உயர்நிலைப் பள்ளி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் தொகுதி, ஒலக்கூர் கிராமத்திலுள்ள அரசு மேல்நிலைப் பள்ளி, இருபால் மாணாக்கர்கள் பயிலும் பள்ளியாகும். இப்பள்ளியில் 6 முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களை மட்டும் தனியாகப் பிரித்து, பெண்களுக்கென தனியாக ஓர் உயர் நிலைப் பள்ளி அமைக்க, பொது மக்கள் சார்பில் பங்குத் தொகை ரூபாய் ஒரு இலட்சம் அரசுக்குச் செலுத்தப்பட்டுள்ளது. எனவே, தேவை மற்றும் அரசின் நிதிநிலையின் அடிப்படையில், வருங்காலத்தில் இப்பள்ளியைப் பிரித்து, பெண்களுக்குத் தனியாக உயர்நிலைப் பள்ளியை அமைக்க, மாண்புமிகு தமிழ்நாடு